**நகர செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதி செயற்திட்டம் - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------------------

நகர செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதி செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய 3706 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.02 (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செயற்திட்டத்தை அமுல்படுத்தும் முகவராண்மை நிறுவனம் ஆகும். முன்னுரிமை நகர செயற்திட்டங்களிற்காக உயர் மட்ட தயார்நிலையை அடைந்துகொள்வதே செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,090.98 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 5.74 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 883.88 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 4.65 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 மார்ச் 06 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன், 2022 மார்ச் 31 ஆம் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் வெளிநாட்டு வள திணைக்கத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2020 ஆகஸ்ட் 18 ஆம் திகதி இலக்கம் ER/AB/US/01(Vol i) என்ற கடிதத்தின் பிரகாரம் அந்த செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைகள் யாவும் 2020 ஆண்டின் இறுதியின் போது நிறுத்தப்பட்டிருந்ததுடன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2022 ஏப்ரல் 27 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி 2024 மார்ச் 31 ஆம் திகதி வரை மீண்டும் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | விதிகள் மற்றும் பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 753(1) மற்றும் (2) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7.291 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் மாநகர சபைக்கு கையளிக்கும் போது நிதிக்கூற்றுக்களில் இருந்து பதிவழிக்கப்பட்ட போதிலும், மேற்கூறப்பட்ட மாநகர சபையினால் பொருள் பெறுவனவு பத்திரம் அல்லது ஏனைய எழுத்து மூல சான்றுகள் போன்ற ஆவண ரீதியான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அந்த சொத்துக்கள் உரிய மாநகர சபைகளுக்கு குழுவொன்றின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்**

| | கூறுகள் | செயற்பாடுகள் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு அவதானிப்புக்கள் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடையப்பட்டுள்ள செயலாற்றல் சதவீதம் | | |
| (அ) | ஆலோசனை | | | | | |
| | SMEC | போக்குவரத்து, பிரயாணம் மற்றும் இயக்க முன்னேற்றம் | 96 | 42 | செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவடைந்ததன் காரணமாக 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ஆலோசனை நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் நிதி மற்றும் பௌதீக செயல் முன்னேற்றம் 42 சதவீதத்திற்கும், 68 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டமை. |
| | ECL | நகரர்ப்புற மேம்படுத்தல் மற்றும் பாரம்பரியம் | 96 | 68 | | |
| | WAPCO Limited | சுற்றச்சூழல் பாதுகாத்தல் | 86 | 50 | | |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் பதில்** | மீள்மதிப்பீட்டு செயன்முறைகள் 2023 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது செயன்முறைகள் நடைபெறுகின்றது. |
| **கணக்காய்வாளரின் பரிந்துரை** | செயற்திட்ட பணிகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (ஆ) | வெளிநாட்டு வள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய ER/AB/US/01(Vol i) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அந்த செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் யாவும் 2020 ஆம் ஆண்டின் இறுதியின் போது நிறுத்தப்பட்டிருந்தது. எனினும், ஆலோசனையாளர்களினால் 68 ஆலோசனை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஒக்டோபர் மாதத்தின் போது ஒப்பந்தம் முடிவடைந்தமையின் காரணமாக வழங்கப்பட்ட அறிக்கையை மீளாய்வு செய்யவதற்கு முடியாதிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளை விரைவுபடுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 2024 மார்ச் 31 ஆம் திகதி வரைய கால நீடிப்பு வழங்கப்பட்ட போதிலும், செயற்திட்டத்தினால் விரிவான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்து செயற்பாட்டில் ஈடுபடுத்துவற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 20 ஆலோசனை அறிக்கைகள் 2022 திசெம்பர் 31 வரையும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தம் நிறுத்தப்பட்டதன் காரணமாக வழங்கப்பட்ட அறிக்கையை மீளாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது. | வேலைத் திட்டத்தின் பிரகாரம் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2022 ஏப்ரல் 27 ஆம் திகதி செயற்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டத்தின் திருத்த நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், இவ்வாறான நிலைமையில் மிகுதி செயற்திட்ட நடவடிக்கைகளை குறித்துரைத்த நேரத்தில் உறுதி செய்தல் தொடர்பாக கணக்காய்வின் போது சந்தேகத்திற்கு இடமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | சகல செயற்பாடுகளும் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது. | செயற்திட்ட நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |